கிருபையுள்ள வார்த்தை

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | November நவம்பர் | 2017

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

தேவனுடைய பண்ணை	3
தேவத்துவத்தின் முக்கியத்துவம்	6
சத்திய வசனத்தை...	8
மத்தேயு	11
சிறுவர் பகுதி	13

In memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லிராஜா, M.S. (I.T.& M.)., M.Th.,

R. ஆன்டனி ராஜா, D.Th.,

Dr. V.S. இம்மானுவேல், M.Sc., D.D.,

C. மியாமின் வார்த்தி, B.Sc.,

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

6 மணி முதல் 6-30 மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,

(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:

CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE

P.O.Box 15, Arasaradi,

Madurai - 625 016. Tamilnadu

கிருபையுள்ள வார்த்தை

நம்மை ஆவியில் வளர்க்க உந்தும் வல்லவரின் வார்த்தை

World Literature Publication

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India

Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol. 94

தேவனுடைய பண்ணை

P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமகன் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

1 கொரி 3:9ல் "நாங்கள் தேவனுக்கு உடனே வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள் என்று வாசிக்கிறோம்." 'நீங்கள் தேவனுடைய பண்ணை' என்று குறிப்பிடுகிறார். தேவனுடைய பண்ணை என்பது எதை குறிக்கிறது? அதற்குள் அடங்கிய காரியங்கள் என்ன? என்பதை வேத வசனத்தின் வெளிச்சத்தில் இம்மாதம் அறிந்துக்கொள்வோம்.

1. தேவனுடைய பாதுகாப்பும், பராமரிப்பும் உண்டு:

நாம் தேவனுடைய பண்ணையாக இருக்கிறோம் என்பது, நமக்கு தேவனுடைய பாதுகாப்பும், பராமரிப்பும் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

பொதுவாக பண்ணை என்பது, ஓரிடத்திலே மிகுதியான பறவைகள் (கோழி, வாத்து), விலங்குகள் (ஆடு, மாடு) மற்றும் பயிர்களை வளர்க்கின்றதை குறிக்கும். இங்கே பண்ணை என்பது மீட்கப்பட்ட ஆத்துமாக்களை, அதாவது, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே திருமுழுக்கிலே பாவங்கள் போக கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்ட அனைவரையும் குறிக்கின்றது.

பண்ணையில் இருக்கின்றவைகள் பண்ணையாரினால் பாதுகாக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் இருப்பது போல, நாம் ஒவ்வொருவருமே சர்வவல்ல தேவனுடைய பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கின்றோம்.

சாத்தான், யோபுவிற்கு இருந்த தேவ பாதுகாப்பைப் பற்றி சொல்வதை கவனியுங்கள்; **யோபு 1:9-10.** "அதற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று."

நம்மீது பேரன்பும் அக்கரையும் கொண்ட எஜமான் (தேவன்) நமக்கு இருக்கிறார். அவர் உருக்கமும் மிகவும் இரக்கமுள்ளவராக இருக்கிறார். அவராலே நாம், மிகவும் கரிசனையுடன் வேலியடைத்து பாதுகாக்கப்படுவது மாத்திரமல்லாமல், ஆசீர்வதிக்கப்படுகிறோம். இதனை நன்கு உணர்ந்த பேதுரு, "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவராகையினால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்." **(1 பேதுரு 5:6-7)** என்று குறிப்பிடுகிறார்

2. நாம் ஆவியில் வளர வேண்டும்

நாம் தேவனுடைய பண்ணையாக இருக்கிறோம் என்பது, நாம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

1 கொரி 3:1-4. "மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை பொறாமையும் வாக்குவாதமும் பேதங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?"

ஆடு, மாடு, கோழி, பயிர் எதுவாக இருந்தாலும் அது வளர வேண்டும்;, அது வளர்ச்சியடையவும், அதற்காக தன்னுடைய பலனை தரவும்தான் அவைகள் பண்ணையாக பராமரிக்கவும், பாதுகாக்கவும்படுகிறது. தேவனுடைய பண்ணையாக

இருக்கின்ற நாம், ஆவியில் வளர்ந்திருக்க வேண்டியதும், கனிதர வேண்டியதும் அவசியமாகும்.

என்ன நிலையில் பண்ணைக்குள்ளே வந்தோமோ, அதே நிலையில் வளர்ச்சியடையாமல் இருப்பது என்பது மிகவும் வேதனைக்குரியதாகும். மற்றும், அது கிறிஸ்துவின் கிருபையையும், தியாகத்தையும் மற்றும் தேவனுடைய பிரயாசத்தையும் வீண்டிப்பதாகவும், அவமதிப்பதாகவும் இருக்கிறது. வளர்ச்சியடையாத மற்றும் கனிதராத நிலை என்பது சாபத்திற்கும், தண்டனைக்கும் உரியதாக இருக்கிறது. **ஏசாயா 5:4–7ல்** "நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? இப்போதும் நான் என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன்; அதின் வேலியை எடுத்துப்போடுவேன், அது மேய்ந்துபோடப்படும்; அதின் அடைப்பைத் தகர்ப்பேன், அது மிதியுண்டுபோம். அதைப் பாழாக்கிவிடுவேன்; அதின் கிளை நறுக்கப்படாமலும், களைகொத்தி எடுக்கப்படாமலும் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்; அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார். சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு."

3. நாம் ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும்.

தேவனுடைய பண்ணையில் இருக்கிற எல்லோரும், தன் தன் பங்கிற்கு வேலை செய்ய வேண்டும். **1 கொரி 3:6, 10** "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்.எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்."

எல்லோருக்கும் ஒரே வேலை அல்ல, ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்பட்ட வேலை உண்டு. நடுகிற வேலை, நீர்பாய்ச்சுகிற வேலை, அஸ்திபாரம் போடுகின்ற வேலை, கட்டுகின்ற வேலை என ஒவ்வொருவரும் தம்தம் வேலையை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். விளையச் செய்கிற வேலை (இது பண்ணையார் செய்கின்ற வேலை), தேவனுடையது.

தேவனுடைய பண்ணையில் யாரும் சும்மா இருக்கக் கூடாது! அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதும் போது, உங்களில் வேலை செய்ய மனமில்லாதவர்கள் சாப்பிடவும் கூடாது என உழைப்பின் அவசியத்தை உணர்த்துகிறார். மேலும், கட்டாயம் வேலை செய்ய கிறிஸ்துவின் பெயரால் கட்டளையிடுகிறார். **2 தெச 3:9–12** "உங்கள் மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம். ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் பாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்."

4. ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள்

தேவனுடைய பண்ணையாக இருக்கிற நாம் ஒவ்வொருவருமே தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்களாக இருக்கிறோம். **1 கொரி 3:16–17** "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்."

நாம் ஒவ்வொருவருமே தனித்தனியாகவும், ஐக்கியமாகவும் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்பதும், நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்பதும், நாம் தேவனுக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

நம்மை சுற்றி இருப்பவர்களுக்கோ, நம்முடன் இருப்பவர்களுக்கோ நாம் முக்கியமற்றவர்களாக இருக்கலாம். அவர்கள் அவ்விதமாகவே நம்மை நடத்தலாம். ஆனால் நீங்களும், நானும் தேவனுக்கு முக்கியமானவர்கள்.

அவர் நம்மை அவரது ஆலயமாக்கியிருக்கிறார் என்பது, நாம் எவ்வளவு தூய்மை நிறைந்த வாழ்வு வாழ வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துவதாக இருக்கிறது. இந்த உலகத்தின் அசுத்தங்கள், செல்வாக்குகள், பாவங்கள் எல்லாவற்றிற்கும் நாம் விலகி, மனிதருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும். **2பேதுரு 3:10,11** "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்;"

5. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

பண்ணையில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தன்னை தானே ஏமாற்றிக்கொள்ளவும், ஒருவர் மற்றவரை கெடுக்கவும் வாய்ப்பு உண்டு. ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

1 கொரி 3: 18–21 "ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களிலொருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது."

நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவும் (வஞ்சிக்கவும்), பிறரால் நாம் வஞ்சிக்கப்படவும் வாய்ப்புகள் உண்டு. ஆகையால் தினசரி வேதவசனங்களை வாசிக்கவும், தியானிக்கவும் செய்ய வேண்டும். வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் நடைபெறும் வேத ஆராய்ச்சிக்கு தவறாது செல்லுங்கள். எந்த காரணத்திற்காகவும் ஆராதனையை தொழுகையை தவறவிடாதிருங்கள். மேலும் இயேசுவே கிறிஸ்து என்பதை எல்லோருக்கும் சொல்ல வேண்டும்.

பயிர்கள் விளையத்தான் சிரமம் மற்றும் கடின உழைப்பும் தேவைப்படுகிறது. ஆனால், களை என்பதை சிரமப்பட்டு விதைக்கவோ, வளர்க்கவோ, பராமரிக்கவோ மற்றும் பாதுகாக்கவோ தேவையில்லை. அது நன்றாக தெரிந்ததினால் தான், சாத்தான் நம்மை மாற்ற சிரமப்படாமல், எளிமையாக குழப்பிமட்டும் விடுகிறவனாக இருக்கிறான். களை எங்கே விதைக்கப்படுகிறதோ, அதாவது அது யாருடைய இருதயத்தில் விதைக்கப்படுகிறதோ, அவரே அதை வேரூன்ற தேவையான எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்பது சாத்தானுக்கு தெளிவாகவே தெரியும். ஆகையால் தேவனுடைய பண்ணையைக் குறித்து கவனமாக இருக்கவேண்டும்.

6. பலன் நிச்சயம் உண்டு

தேவனுடைய பண்ணையில் வேலை செய்கின்ற ஒவ்வொவருக்கும் நிச்சயமாகவே பலன் உண்டு. தங்களுடைய வேலைக்கேற்ற பலனை நிச்சயம் அடைவார்கள். **1கொரி 3:11–15** "போடப்படிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்."

தேவன் யாரையும் இலவசமாக வேலைகொள்ளமாட்டார். ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் நிச்சயமாகவே பலன் உண்டு. **மத் 10:42** "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான்."

அன்பானவர்களே! தேவனுடைய பண்ணையாகிய நாம், ஜாக்கிரதையுடன் உழைக்கிறவர்களாக, முதிர்ச்சியை நோக்கி வளர்ந்து கனிதருகின்றவர்களாக இருப்போம். சர்வவல்ல தேவனுடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும், பலனையும் பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல தேவன் அருள்புரிவாராக!

– அன்புடன், ஆசிரியர்

பாடம் : 1 - தேவத்துவத்தின் முக்கியத்துவம்

கிறிஸ்தவத்தில் மிக அதிகமாக வழக்காடுதலுக்கும் விவாதத்திற்கும் அடிகோலிய உபதேசங்களில் ஒன்று, 'தேவத்துவம்' குறித்த உபதேசம். நாம் தேவனை முற்றிலும் அறிந்துகொள்ள இயலாது என்பது ஆச்சரியமல்ல; ஏனெனில், வரையறைக்குட்பட்ட நமது அறிவினால், வரையறைக்காப்பாற்பட்ட தேவனை பற்றிக்கொள்ள நாம் முற்படுகிறோம். எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்கள் இந்த முக்கியத்துவம் வாய்ந்த உபதேசத்தைக் குறித்து புரிந்து கொண்டிருத்தல் அவசியம். தேவத்துவத்தைப் பற்றிய உபதேசம் என்பது பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு மற்றும் பரிசுத்த ஆவியாகிய மூவருமே, தெய்வீகமானவர்கள் என்று பொருள். ஆனால் அவர்கள் மூன்று தேவன்களல்ல, ஒன்றானவர். தேவத்துவம் என்பது ஒரு இலத்தீன வார்த்தை. அதன் பொருள், ஒன்றில் மூன்று; இப்படியாக தேவத்துவம் என்பது ஒருமையில் காணும் மூன்று என்று குறிப்பிடுகிறது. இந்த உபதேசத்தை புரிந்து கொள்வது கடினமானதால், அநேகர் இதை வெளிப்படையாக மறுக்கன்றனர் அல்லது அதை வேறுவிதமாக மாற்றி விடுகின்றனர். இதினால் இயேசுவையோ அல்லது பரிசுத்த ஆவியையோ அல்லது இருவரையுமோ (தெய்வீகமானவர்களல்ல) மறுதலிப்பதனால் முழு தெய்வீகத்தையும் மறுதலிக்கின்றனர். இந்த வரிசை பாடங்களில் நாம் முதலாவதாக, "தேவத்துவம் பற்றிய உபதேசம் ஏதாவது வித்தியாசத்தை ஏற்படுத்தப் போகிறதா? என்ற கேள்விக்கு பொருள் காண்போம். அடுத்து, இயேசு மற்றும் பரிசுத்த ஆவியின் தெய்வீகத் தன்மைக்கான வேதாகம ஆதாரங்களைப் பார்ப்போம். இறுதியாக தேவத்துவத்தைப் பற்றிய உபதேசத்தில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? என்ற கேள்விக்கு பதில் காணும்படி கற்போம்.

இந்த உபதேசத்தை சிலர் விட்டுவிடுவது ஏன்?

இந்த உபதேசம் மிகச்சிறிய வித்தயாசத்தை மட்டுமே ஏற்படுத்துகிறது என்று சிலர் சொல்வதுண்டு. அவர்களுடைய பார்வையில், குறிப்பிடத்தக்க ஒழுங்கு முறையோ அல்லது ஒழுக்க சம்மந்தப்பட்ட வாக்குவாதமோ மாற்றம் பெறாது. இது ஒருவேளை தேவத்துவமே உண்மையாயிராவிட்டாலும் கூட நிகழ்வது. பெரும்பால கிறிஸ்தவ இலக்கியம் மிகச்சிறிய மாற்றம் பெற வேண்டும். நடைமுறையில் சொன்னால், அநேக கிறிஸ்தவர்கள் தேவத்துவ உபதேசத்தை எப்படியும் புரிந்து கொள்ளப்போவதில்லை, ஆக அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்திவிடப்போகிறது. சத்தியத்தைக் குறித்த தீர்வைக் காண அநேகரின் அளவுகோள், "இது எனக்கு என்ன செய்யும்?" என்பதுதான். இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஒரு காரியம் (உபதேசம்) என்னுடைய இலக்கையோ ஆசைகளையோ நிறைவேற்றாவிட்டால் பிறகு அது புறத்தள்ளப்பட வேண்டும் அல்லது கண்டுகொள்ளப்பட கூடாதது. இந்த உபதேசம் பிரிவினைகளையுண்டாக்குவதால், அநேக கிறிஸ்தவர்களின் கூற்றுப்படி அதைக் கைவிட வேண்டியதுதான். சிலருக்கு இயேசுவில் தாங்கள் கொண்டுள்ள விசுவாசத்திற்கு ஒரு மிகப்பெரிய தடையாகிறது. மேற் குறித்த காரணங்களினால், தேவதத்துவம் பற்றிய உபதேசம் அன்றாடகசெயல்களில் கிறிஸ்தவனுக்கு கொஞ்சம் வித்தியாசத்தை ஏற்படுத்துவதால், இது தொடர்பான போதனை முக்கியத்துவமற்றது என்று அநேகர் சொல்லக்கூடும்.

குறிப்பிட்ட அளவுக்கு, தேவத்துவத்தைப் பற்றிய விசுவாசம் கொஞ்சம் கொஞ்சமாக அழிவுற்று வரும்போது, பொதுவாகவே கிறிஸ்தவம் மறுவிளக்கத்திற்குள்ளாகிறது. இன்றைய மார்க்க உலகில் பெரும்பாலும் வலியுறுத்தப்படுவது

உணர்வுகளே; அல்லது, நாம் வாழும் சமுதாயத்தின் மத்தியில் ஒரு மார்க்கத்தின் செல்வாக்கு எப்படி உள்ளது எனபதே முக்கியத்துவம்படுகிறது. இந்த இரண்டு விஷயங்களிலுமே, தேவத்துவ உபதேசம் அந்த சூழலுக்கு பொருத்தமற்றது. இப்படியாக மீண்டும் ஒரு முறை, அநேகரும்கூட, இந்த உபதேசம் கைவிடப்பட வேண்டும் என்பார்கள்.

தேவத்துவத்தைக் குறித்த உபதேசம் பிற மதங்களிலும் கூட, வாக்குவாதங்களுக்கும் உட்பட்டதாகிறது. பிற மதங்கள், 'கிறிஸ்தவர்களுக்கும் கூட பல தெய்வ கோட்பாடுகளையுடையவர்களே என்று சொல்லி குற்றப்படுத்துகின்றனர்; ஏனெனில் நாம் தேவத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பது, அவர்களுடைய மனதிலே மூன்று தேவன் (ர்) களை கொண்டுள்ளோம் என்று நினைத்துக் கொள்கின்றனர்.

இந்த உபதேசம் அதிகப்பட்ச புதிராக காணுகிறது, அதன் மிகமோசமான நிலை, முரண்பாடாக தெரிகிறது. தேவத்துவ உபதேசம் ஒரு பெரிய அளவில் வாக்குவாதத்திற்குரியதாகையால், இப்படிப்பட்ட பிரிவினை வாதத்திற்குரிய இந்த உபதேசத்தை, கை விடுவதே சிறந்தது என்ற முடிவுக்கு அநேகரும் வருகின்றனர்.

தேவதத்துவத்தின் முக்கியத்துவம்

இந்த உபதேசம் தேவன் யார் என்ற தன்மையைக் குறித்த போதனையானதால், எப்படியிருப்பினும், இந்த உபதேசம் சிறியதோ, புறம்பான கருத்தோ அல்ல. தேவதத்துவத்தின் ஒரு கருத்து மாம்சமாகுதல் அல்லது தேவன் மனுஷனாக மாம்சத்தில் வருவது. வாழ்க்கையிலே கஷ்ட நிலைகளும் வருத்தங்களும் ஏற்படும் போது, பெரும்பாலும் மனிதன் தேவன் எங்கே என்று வினா எழுப்புகிறான். மாம்சத்தில் வந்தார் என்பது, தேவன் இந்த உலகத்தின் பாடுகளைக் கண்டு அலட்சியமாக இருப்பதில்லை என்பதை விளக்கப்படுத்துவதுதான்; மாறாக, உலகத்தை இரட்சிக்கும்படி அவர் அதன் ஒரு பகுதியாக மாறினார். ஆனால், இந்த உபதேசமானது, நியாயமே இல்லாமல், ஒன்றும் அறியாத ஒரு ஜீவனை தண்டிப்பது என்ற ஏற்பாட்டை புறந்தள்ளுகிறது. இயேசு தேவத்துவத்தின் ஒரு பகுதியானால், அவர் விருப்பமில்லாமல் பலியான ஒரு வரல்லவே!

மேலும், கிறிஸ்தவம் மற்ற மதங்களிலிருந்து மாறுபட்டது என்று தேவத்துவம் காட்டுகிறது. நிறை மதங்களைக் கொண்ட நமது சமுதாயத்தில், அனைத்து மதங்களும், அடிப்படையில் சமமானவைகளாகப் பார்க்கப்படுகிறது; அவைகளில் காணும் வித்தியாசங்கள், ஒப்புரவாக்கப்படமுடியும் ஒப்புரவாக்கப்படக்கூடும் அல்லது மேலோட்டமாக விடப்படலாம். ஆகிலும், இப்படிப்பட்ட நம்பிக்கையை கூடாத காரியமாக தேவத்துவம் காட்டுகிறது. தேவத்துவம் பிற மதங்களுடன் கலந்துவிடக்கூடாது. அது ஒப்புயர்வற்றது.

கிறிஸ்தவர்களுக்குள்ளே நாம் யாரிடம் ஜெபம் செய்ய வேண்டும் என்ற கேள்வி பொதுவாக விவாதிக்கப்படுகிறது. பிதாவாகிய தேவனிடத்திலேயன்றி வேறு யாரிடத்திலும் ஜெபிக்கும் படி வேதாகமம் எங்கும் கட்டளையிடாததால், எல்லா ஜெபங்களும் பிதாவாகிய தேவனிடத்தில் மட்டுமே ஏறெடுக்கப்படவேண்டும். இந்த பார்வை, தேவத்துவத்தில் உள்ள ஒவ்வொருவருமே தனிப்பட்ட நபர்கள் என்பதாக காண்கிறது. ஆனாலும், தேவத்துவம் சொல்லும் கருத்து என்னவெனில், சில செயல்கள் தேவத்துவத்தின் ஒரு நபரின் செயல்பாடாக இருப்பினும்; எல்லாருமே எல்லா நிலைகளிலும் அதில் பங்கு பெறுகின்றனர். பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் பெயராலே நாம் ஏறெடுக்கும் ஜெபத்தை பிதாவாகிய தேவனிடம் கொண்டு செல்ல உதவுகிறார் (ரோ. 8:26-27 ; யோ 15:16; 16:23). ஆகையால், நாம் பிதாவாகிய தேவனிடம் ஜெபித்தாலும், எல்லாருமே நம்முடைய ஜெபத்திற்கான பதில் கிடைப்பதில் பங்குபெறுகின்றனர்; இத்தகைய நிலை, தேவத்துவத்தின் அங்கத்தினர்களுடைய செயல்படுகளில் பிரிவினையுள்ளது என்ற வாதத்தை கேள்விக்குள்ளாக்குகிறது. ஆகையால், நம்முடைய ஜெபங்களும், நம்முடைய தொழுகையும் பிதாவாகிய தேவனிடம் என்றிராமல் ஒன்றான மேய் தேவனிடமாக ஏறெடுக்கப்படுகிறது.

– தொடரும்...

பாடம் : 1 - சத்திய வசனத்தை நிதானமாய் பகுப்பது

முகவுரை : அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்கிற ஒரு வாலிப கிறிஸ்தவ பிரசங்கியாருக்கு சொன்னது : "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிரூபிக்கும்படி ஜாக்கிரதையாயிரு" **(2 தீமோத்தேயு 2:15).** "சத்திய வசனம்" என்பது "பைபிள்" என்னும் கிறிஸ்தவ வேதாகமம் **(யோவான் 17:17).** சரியாக உபயோகப்படுத்தினால் இந்த வசனம் பூமியிலிருந்து பரலோகத்துக்கு வழிகாட்டும். தவறாக உபயோகப்படுத்தினால் "சத்திய வசனத்தை" புரட்டி, நம்மை கெடுத்துக்கொள்வோம்.

I. வேதாகமம் தேவனுடைய சிறந்த நூல் நிலையம்.

அ. வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் இருக்கின்றன.

ஆ. அதில் முதல் பெரும் பகுதி பழைய ஏற்பாடு.

1. இந்த பழைய ஏற்பாட்டில் 39 தனிப்பட்ட புத்தகங்கள் இருக்கின்றன.
2. இந்த பழைய ஏற்பாட்டில் விளக்கமாகத் தெரிகிற இரண்டு காலப்பகுதிகளைப் பார்க்கிறோம்.

(a) **ஆதியாகமம் 1: 1** - லிருந்து **யாத்திராகமம் 20-ஆம்** அதிகாரம் மட்டும், கடவுள் குடும்பத்தலைவர்களுடன் தனிப்பட்ட முறையாகவும் குடும்பமாகவும் காரியங்களை நடத்தினார். கடவுள் தகப்பன்மார்கள் மூலமாக பேசினதால் இது பிதாக்களின் காலம் என்று சொல்லப்படுகிறது, (ஒப்பிடுக **அப்போஸ்தலர் 7:11: 13:17).**

(b) **யாத்திராகமம் 2-ஆம்** அதிகாரத்திலிருந்து மல்கியா மட்டும் (உண்மையில் சொல்லப்போனால், அப்போஸ்தலர் 2-ஆம் அதிகாரம் மட்டும் என்று சொல்லலாம்), தேவன் இஸ்ரவேல் ஜாதியாரோடு ஒரு ஜாதியாக தமது காரியங்களை நடத்தினார். இது நியாயப்பிரமாணத்தின் காலம் என்று சொல்லப்படுகிறது, **கலாத்தியர் 4:5.**

3. சுமார் 32 ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு பழைய ஏற்பாட்டின் வசனங்களை எழுதினார்கள்.

(a) ஒரு சில வேத ஆராய்ச்சியாளர்கள் யோபின் புத்தகமே எல்லாவற்றிலும் பழமையானதென்று நினைத்திருந்தாலும், வேறு ஆராய்ச்சியாளர்கள் மோசே எழுதின புத்தகங்களே எல்லாவற்றிலும் பழமையென்று நினைக்கிறார்கள்.

(b) எப்படியிருப்பினும், பழைய ஏற்பாட்டை எழுதி முடிக்க 1,100 ஆண்டுகள் பிடித்தது.

(c) பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் எனும் மல்கியா, கிறிஸ்துவுக்கு முன் சுமார் 400 ஆண்டுகுக்கு முன் எழுதி முடிக்கப்பட்டது.

இ. வேதத்தில் இரண்டாவது பெரும் பகுதி புதிய ஏற்பாடு.

1. புதிய ஏற்பாட்டின் புத்தகங்களில் முதல் நான்கு புத்தகங்களும், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம் வரைக்கும் நியாயப்பிரமாணத்தின் காலம் அல்லது இஸ்ரவேலின் பகுதியாக இருக்கிறது.

(a) முதல் நான்கு புத்தகங்களில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் பற்றியும், வரப்போகிற புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

(b) இயேசு சொன்ன உபதேசம் இந்த புத்தகங்களில் நேரடியாக சொல்லப்பட்டாலும், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் மட்டும் அந்த பெந்தெகோஸ்தே நாளில் தான் புதிய உடன்படிக்கையின் காரியங்கள் அமுலாக்கப்பட்டுள்ளது.

2. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம் தொடங்கி மற்றபுத்தகங்களும் புதிய ஏற்பாட்டின்

காலத்தை விவரிக்கிறது.

3. மொத்தம் 8 ஆசிரியர்கள் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களில் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த வார்த்தைகளை எழுதினார்கள்.

(a) இதற்கு சுமார் 40 - 60 வருஷங்கள் பிடித்தது.

(b) இந்த 27 புத்தகங்கள், அப்போஸ்தலரின் உபதேசம் என்று கூட சொல்லப்படுகிறது.

II. பழைய ஏற்பாட்டை ஐந்து பாகங்களாகப் பிரிக்கலாம்.

அ. பழைய ஏற்பாட்டின் முதல் பாகம் : நியாயப்பிரமாணம்.

1. அதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) ஆதியாகமம் (d) எண்ணாகமம்

(b) யாத்திராகமம் (e) உபாகமம்

(c) லேவியராகமம்

2. **ஆதியாகமம் 1 : 1 – லிருந்து யாத்திராகமம் 20** வரையில் கடவுள் தமது சித்தத்தை தனிப்பட்ட ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் வெளிப்படுத்தினார். குடும்பத்தலைவர்களின் மூலம் நடத்திக் கொண்டதற்காக இது பிதாக்களின் காலம் என்று சொல்லப்படுகிறது.

(a) குடும்பங்களில் ஆண் தலைவர்கள், அவரவர் குடும்பத்துக்கு ஓர் ஆசாரியன் போல் பணியாற்றினார்கள்.

(b) சுமார் 2500 வருஷங்களாக இப்படி நடந்தது. இந்த காலத்தில் கடவுள் ஒருமதமாக யாதொரு ஒழுங்கோ, அமைப்போ, சட்ட முறைகளோ ஏற்படுத்தவில்லை. சில சட்டங்களோடும் மனசாட்சியோடும் வாழ்ந்தார்கள்.

3. **யாத்திரகாமம் 20**லிருந்து அரேபியாவிலுள்ள சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தின் காலம் இஸ்ரவேலர்களோடு ஆரம்பித்தது. இஸ்ரவேலர்கள் இப்பொழுது யூதர்களாக சொல்லப்படுகிறார்கள்.

4. மற்ற எல்லா பழைய ஏற்பாட்டு புஸ்தகங்கள் நியாயப்பிரமாண காலத்தில் அடங்கியிருக்கிறது.

ஆ. பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் இரண்டாவது பாகம் சரித்திரம்.

1. அதில் 12 புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) யோசுவா (g) 2 இராஜாக்கள்

(b) நியாயாதிபதிகள் (h) 1 நாளாகமம்

(c) ரூத் (i) 2 நாளாகமம்

(d) 1 சாமுவேல் (j) எஸ்றா

(e) 2 சாமுவேல் (k) நெகேமியா

(f) 1 இராஜாக்கள் (l) எஸ்தர்

2. இந்த சரித்திர பாகம் கால வரிசையாக எழுதப்பட்டிருக்கிறது.

3. கடவுள் இஸ்ரவேலர்களை கானான் தேசத்துக்குள் கொண்டு வந்ததிலிருந்து, சுமார் கி.மு. 400 வரைக்கும் இஸ்ரவேலின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது.

இ. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் மூன்றாவது பாகம் இலக்கியம்.

1. இதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) யோபு (b) சங்கீதம்

(c) நீதிமொழிகள் (d) பிரசங்கி

(e) உன்னதப்பாட்டு

2. மற்ற புஸ்தகங்களுக்கு சம்பந்தமாக இந்த பாகத்தில் இங்கும் அங்கும் சிறிய அளவுக்கு, நியாயப்பிரமாணம் சரித்திரம், தீர்க்கதரிசனம் போன்றவை கலந்திருக்கிறது.

பாகத்தில் இங்கும் அங்கும் சிறிய அளவுக்கு, நியாயப்பிரமாணம் சரித்திரம், தீர்க்கதரிசனம் போன்றவை கலந்திருக்கிறது.

3. இருந்தாலும் இவைகள் அதிகமாக இலக்கியமாய் இருக்கிறது.

(a) இந்த புத்தகங்கள் வாழ்க்கையின் முறைகளை இலக்கிய அழகோடும், ஆழ்ந்த கருத்தோடும், சொல் வன்மையோடும் விளங்குகிறது.

(b) அவைகள் நித்தியமான சத்தியங்களோடு எல்லா தேசத்தார்களுக்காகவும் ஆறுதலையும் உற்சாகத்தையும், புத்திமதிகளையும் கொண்டு வருகிறது.

ஈ. பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் நான்காவது

பாகம் பெரிய தீர்க்க தரிசன புத்தகங்கள்.

1. இதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) ஏசாயா

(b) எரேமியா

(c) புலம்பல்

(d) எசேக்கியல்

(e) தானியேல்

2. இவைகள் நீண்ட புஸ்தகங்களாக இருக்கிறபடியால் வேத ஆராய்ச்சியாளர்கள் "பெரியதீர்க்கதரிசிகள்" என் பார்கள்.

(a) இதற்காக மற்ற தீர்க்கதரிசனங்களை விட இவைகள் முக்கியமானவைகள் என்பது அர்த்தமல்ல

(b) நீண்ட தீர்க்க தரிசனங்களாக இருக்கிறபடியால் இவைகள் அதிகமாக மேசியாவின் காரியங்களை முன் கூறுகிறது.

உ. பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் ஐந்தாவது பாகம் சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள்.

1. இதில் 12 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) ஓசியா

(b) யோவேல்

(c) ஆமோஸ்

(d) ஒபதியா

(e) யோனா

(f) மீகா

(g) நாகூம்

(h) ஆபகூக்

(i) செப்பனியா

(j) ஆகாய்

(k) சகாரியா

(l) மல்கியா

2. இந்த சிறிய தீர்க்க தரிசனங்கள் அமத்சியா அல்லது, யோவாஸ் என்கிற இராஜாக்களின் காலத்தில் சுமார் கி.மு. 850 தொடங்கி, நெகேமியாவின் காலத்தில் சுமார் கி.மு. 400 வரைக்கும் இந்த தீர்க்க தரிசிகள் வெவ்வேறு குழப்பங்களைக்குறித்து தீர்க்கதரிசனமாக இஸ்ரவேல்மக்களை எச்சரித்தார்கள்.

– தொடரும்...

ஆசீர்வாத தருணம்!

"கிறிஸ்துமஸ்" பண்டிகை பற்றிய வேதாகம உண்மைகள் மற்றும் வரலாற்று ஆதாரங்கள் உள்ளடக்கிய ஆங்கில DVD கிடைக்கும்.

"எது சரியான சபை?" வேத வசனத்தின்படி அறிந்துகொள்ள விருப்பமுடைய உங்களுக்கு சிறந்த வழிகாட்டி புத்தகம்

தேவன் விரும்புகிறபடி அவரை தொழுது, "அவர் நாமத்தை மகிமைப்படுத்துவது" எப்படி? என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ள உதவும் ஆழமான கருத்துக்கள் அடங்கிய சிறந்த புத்தகம் .

தொடர் 24 மத்தேயு : கிறிஸ்து, ராஜா

தலைப்பு

"தேவனுடைய ஈவு" என்று அர்த்தப்படுகிற மத்தேயு என்னும் பெயரை உடைய இவர், தமது பெயரைத் தாங்கியுள்ள புத்தகத்தை எழுதினார் என்று தொடக்ககால சபை எழுத்தாளர்களால் மதிப்பு அளிக்கப்பட்டார். இயேசுவைச் சந்திக்கும்முன்பு ஒரு ஆயக்காரராக இருந்த மத்தேயு, பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரானார் **(மத்தேயு 9:9 முதல்.: 10:3: மாற்கு 3:18: லூக்கா 6:15: அப்நடபடிகள் 1:13).** இவர் லேவி என்றும் அறியப்பட்டார் **(மாற்கு 2:14: லூக்கா 5:27 முதல்).**

பின்னணி

தானியேல் 2ன் உருவகம், தேவன் தமது ராஜ்யத்தை அமைக்கும் காலம் வரைக்கும் உலகத்தின் வரலாற்றைத் தொகுத்துரைத்தது; பொன்னால் ஆன தலை பாபிலோன் பேரரசைக் குறித்தது; வெள்ளியால் ஆன மார்பும் புயமும் மேதிய பெர்சிய பேரரசைக் குறித்தது; வெண்கலத்தால் ஆன வயிறும் தொடைகளும் கிரேக்க பேரரசைக் குறித்தது; இரும்பால் ஆன கால்கள் (இரும்பும் களிமண்ணும் கலவையால் ஆன பாதங்களுடன்) ரோமப் பேரரசைக் குறித்தது. பழைய ஏற்பாடு முடிவடைந்தபோது, பாபிலோனியர்கள் மேதிய-பெர்சியர்களால் தோற்கடிக்கப்பட்டிருந்தனர், மற்றும் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பியிருந்தனர். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையிலான நானூறு ஆண்டுகளில், மேதிய-பெர்சியப் பேரரசைத் தொடர்ந்து கிரேக்கப் பேரரசு எழும்பிற்று; அதில் மகா அலேக்சாண்டர் என்பவர் உலகம் முழுவதையும் கைப்பற்றினார். அலெக்சாண்டர் இறந்தபோது, அவர் ஆண்டராஜ்யம் கிரேக்கு, ஆசியா, எகிப்து, மற்றும் சீரியா என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. யூதர்களின் நாடானது முதலில் எகிப்தியர்களாலும், பின்பு சீரியர்களாலும் கட்டுப்படுத்தப்பட்டது. சீரியாவின் ஆட்சியாளர்களில் ஒருவரான அந்தியோகஸ் எபிபெனெஸ் என்பவரின் வரம்புமீறிய கொடுங்கோன்மை, மக்கபேயரின் கலகத்திற்கும் யூதர்கள் சற்று விடுதலையாய் இருந்த காலத்திற்கும் வழிநடத்தியது. விடுதலையின் இந்தக் காலகட்டமானது, நாடு ரோமர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபோது முடிவடைந்தது. வரலாற்றில் அந்தக்காலகட்டத்தில், "காலம் நிறைவேறினபோது, தேவன் தமது குமாரனை அனுப்பினார்" **(கலாத்தியர் 4:4).**

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் இயேசுவின் வாழ்வைச் சித்தரிக்கின்றன. இந்த நான்கு புத்தகங்கள் பெரும்பாலும், " சுவிசேஷங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் இவற்றை "சுவிசேஷ விவரங்கள்" என்று நினைப்பதே விரும்பத்தக்கதாக உள்ளது, ஏனெனில் சுவிசேஷம் (நற்செய்தி) என்பது ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இந்தப்புத்தகங்கள் அடிக்கடி, "வாழ்க்கை வரலாறு" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன; ஆனால் இவைகள் வாழ்க்கை வரலாற்றிற்கான பொதுவான வடிவமைப்புகளைப் பின்பற்றுவதில்லை. இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நாள் வரிசை அமைவின்படியான விவரங்களைக் கொடுத்தல் என்பது, இந்த நான்கு எழுத்தாளர்களின் நோக்கமாயிருப்பதில்லை. மாறாக, அவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, இயேசு யார் என்பதையும், அவர் பூமிக்கு வந்தது ஏன் என்பதையும் காண்பிப்பதற்காக, அவரது வாழ்விலிருந்து நிகழ்ச்சிகளைத் தேர்ந்து கொண்டனர். முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்கள் ''ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. ஏனென்றால், அவைகள் ஒன்றுபோல் உள்ளன மற்றும் அனேகமாக ஒரே கால கட்டத்தில் எழுதப்பட்டன. யோவானின் சுவிசேஷ விவரம் மாறுபட்ட நோக்கத்திற்காக எழுதப்பட்டது. அனேகமாக இது முதல் மூன்று நூல்கள் எழுதப்பட்டப் பல ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது.

சுவிசேஷ விவரம் ஒவ்வொன்றும் மனதில் வெவ்வேறு மக்கள் கூட்டத்தைக் கொண்டு எழுதப்பட்டது; இவை ஒவ்வொன்றும் தத்தனது விசேஷித்த வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளது. மத்தேயு எழுதிய சுவிசேஷப் புத்தகம், அடிப்படையில் யூதமக்கள்கூட்டத்தார், நாசரேத்தூர் இயேசுவே பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று நம்பி இணங்கச்

செய்வதற்காக எழுதப்பட்டது. மத்தேயு ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பிக்கின்றார் **(1:23; 2:6, 15, 23, முதலியன).** அவர் யூதர்களுக்குப் பழக்கமான **"தாவீதின் குமாரன்" (1:1)** போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றார். இயேசு தமது ராஜ்யத்தை நிலைநாட்ட வந்த ராஜா என்று இதில் வலியுறுத்தப்படுகின்றார். **"ராஜ்யம்"** என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் ஐம்பத்தி ஐந்து முறை காணப்படுகிறது.

24ம் அதிகாரத்தின், முன்னுரைக்கும் இயல்பின் காரணத்தால், இப்புத்தகம் கி.பி. 70ல் எருசலேம் அழிவதற்கு முன்பு எழுதப்பட்டது என்று யூகித்தல் நியாயமானதாகவே உள்ளது. பழங்காலப் பாரம் பரியத்தின்படி, மத்தேயு சுவிசேஷப் புத்தகம்தான் முதன் முதல் எழுதப்பட்ட சுவிசேஷ விவரமாகும்.

வரைகுறிப்பு

I. பின்னனி மற்றும் தயாரிப்பு (1-4).

II. கலிலேயாவில் ஊழியம் (5-18).

அ. மலைப்பிரசங்கம் (5 - 7).

ஆ. அற்புதங்கள் (8:1 - 11:1).

இ. உவமைகள் (11:2-13:53).

ஈ. எதிர்ப்புகளும் பின்வாங்குதலும் (13:54 - 16:12)

உ) இயேசுவின் மரணம் முன் எதிர்பாக்கப்படுதல் (16:13 - 18:35).

III. கடைசி ஊழியம் (19 - 28).

அ) எருசலேமுக்குப் பயணம் செல்லுதல் (19;20).

ஆ) வெற்றி பிரவேசம் (21:1-16).

இ) போதித்தல் (21:17 - 25:46)

ஈ) கடைசி மணிகள் (26;27).

உ) உயிர்த்தெழுதலும் பிராதன கட்டளையும் (28).

மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தில் இருந்து பாடங்கள்

சுவிசேஷ விவரங்களில், பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, ஆண்டுகளினூடே தேவன் செய்திருந்த யாவற்றினுடைய உச்சக்கட்டத்தை நாம் கொண்டுள்ளோம். இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதும் இயேசு நமக்காக மரிக்க இப்பூமிக்கு வருமளவுக்கு நம்மீது அதிகமாய் அன்புகூர்ந்தார் என்பதும், இந்த சுவிசேஷ விவரங்களில் உள்ள மிக முக்கியமான பாடங்களாக இருக்கின்றன. அவருக்கு நாம் நமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என்பது, இந்த சத்தியங்களின்மீது தர்க்கரீதியான பயன்பாடாக உள்ளது!

இருப்பினும், சுவிசேஷ விவரங்கள், நடைமுறைப் போதனை நிறைந்தவைகளாக உள்ளன. இது இயேசுவை மாபெரும் போதகராக முன்வைக்கும் மத்தேயு சுவிசேஷத்தை பொருத்தமட்டில், விசேஷித்த உண்மையாக உள்ளது. மத்தேயு சுவிசேஷம் மாத்திரமே மலைப்பிரசங்கத்தைப் பதிவு செய்துள்ளது (5-7). மத்தேயு சுவிசேஷம், 25ம் அதிகாரத்தில் உள்ள பத்துக் கன்னியர்களின் உவமை போன்ற, மற்ற எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்டிராத பல உவமைகளையும் கொண்டுள்ளது.

மத்தேயு சுவிசேஷம், சபை என்பதே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ராஜ்யம் என்பதைக் கூறும் சுவிசேஷ விவரமாகவும் உள்ளது (16:18, 19). ராஜாவாகிய இயேசு தமது ராஜ்யத்தை நிலைநாட்ட வந்தால், இது தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கங்களில் சபையின் முக்கியவத்தைப் பற்றிய சில விஷயங்களைக் கூறுகிறது?

மத்தேயு சுவிசேஷம், மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் அறைகூவலுடன் முடிகிறது. இயேசு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, ..." என்று கூறினார் (28:19). தொடக்ககால சபையானது இந்த அறைகூவலைச் சந்தித்தது. நாம் இதைச் சந்திக்கின்றோமா?

சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. Mrs. பிலோமினா பிரபாகரன் - காரைக்கால்
2. P. இந்திரா பாண்டி - திருமங்கலம்
3. S. கேத்ரின் அருள்தேசம் - மதுரை
4. S. எட்வின் - சென்னை
5. Mrs. சாந்தா ஜெயக்குமார் - சென்னை
6. Mrs. ச. ஜீவா செல்வராணி - திருச்சி
7. Mrs. S. மேனகா - சித்தூர்
8. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
9. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி

யோனா

டியர் குட்டீஸ்! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். நாம் இந்த மாதம் யோனா தீர்க்கதரிசி பற்றி அறிந்துக்கொள்வோமா?

இஸ்ரவேல் நாட்டிலே காதேப்பேர் என்ற ஊரிலே அமித்தாய் என்னும் ஒரு தீர்க்கத்தரிசி இருந்தார். அவருடைய மகன்தான் இந்த யோனா. யோனாவும் ஒரு தீர்க்கத்தரிசிதான். தேவன் ஜனங்களுக்கு சொல்லும் கட்டளையையும், எச்சரிக்கையையும், இவர்கள் தேவனிடத்தில் கேட்டு ஜனங்களிடத்தில் அறிவிக்க வேண்டும். இதுதான் இவர்களுக்கு மிகமிக முக்கியமான வேலை.

தேவன் ஒருமுறை யோனாவை, நினிவே பட்டணத்துக்கு போய், 'அவர்கள் மிகவும் பாவம் செய்து மோசமான வாழ்க்கை வாழ்வதினாலே, நான் அழிக்கப்போகிறேன்' என்று சொல் என்றார். யோனா தேவனிடம், 'அதெல்லாம் போகமாட்டேன்' என்று சொல்லவில்லை. ஆனால், தேவன் சொன்ன வேலையையும் செய்யாமல், நினிவேக்கும் போகாமல், தர்ஷீஸ் என்ற ஊருக்கு கப்பலில் போனார். யோனா தேவனுக்கு தெரியாமல் போய்விட நினைத்தார். ஆனால் எல்லாவற்றையும் அறிந்த தேவன், யோனாவின் பாவத்தை அவருக்கு உணர்த்த விரும்பினார். தேவன் கடலில் புயல் வீசச் செய்தார். கப்பல் தத்தளித்தது, அதிலே பயணம் செய்த எல்லாரும் மரண பயத்தினால் அலறினர்.

கப்பலில் பயணம் செய்தவங்க, சீட்டு போட்டு, யோனாவின் நிமித்தமாக இந்த புயல் ஏற்பட்டது என்று கண்டுபிடித்தனர். யோனா, 'அதெல்லாம் கிடையாது! நான் ஒன்றும் செய்யவில்லை' என பொய் பேசாமல், 'நான் தான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன்' என தனது குற்றத்தை ஒத்துக்கொண்டார். அது மட்டுமா? 'என்னை கடலிலே தூக்கி போட்டுவிடுங்கள், புயல் நின்றுவிடும்' என தான் செய்த குற்றத்திற்கு தண்டனையையும் ஏற்றுக்கொள்ள தயாரானார்.

பயணிகள் கப்பலில் இருந்த சாமான்களை எல்லாம் தூக்கி கடலிலே போட்டார்கள். என்ன பயன்? புயல் நிற்கவில்லை. கடைசியாக யோனாவை தூக்கிப் போட்டார்கள்; என்ன ஆச்சரியம்! உடனே புயல் நின்று, கடல் அமைதியானது.

கடலிலே விழுந்த யோனாவை, தேவன் ஒரு பெரிய மீனை அனுப்பி, விழுங்க வைத்து, மூன்றாம் நாள் கரையிலே கக்க வைத்து பத்திரமாக பாதுகாத்தார். ஏன் தெரியுமா? யோனா அண்ணன் தான் செய்த குற்றத்தை ஒத்துக்கொண்டு அதை அறிக்கையிட்டார். அல்லவா? அதினால் தான். குட்டீஸ் நாம் தவறு, குற்றம் ஏதேனும் செய்தால், முதலாவது அதை ஒத்துக்கொண்டு, மனந்திரும்ப வேண்டும். அப்பொழுது தேவன் பாதுகாப்பார்!

மனை வசனம்: நீதி 28:13

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."

சிறுவர் பகுதி புதிர் எழுதியவர்கள்

R. சிட்டு தேவி – செங்கல்பட்டு

சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோனாவின் வேலை என்ன?
2. யோனாவை தேவன் எங்கு போகச் சொன்னார்?
3. யோனா செய்த குற்றம் என்ன?
4. கடல் எப்பொழுது அமைதியானது?
5. தேவன், யோனாவை காப்பாற்றியது ஏன்?
6. இந்த நிகழ்ச்சியில் இருந்து நீ கற்றது என்ன?

நவம்பர் மாதக் கேள்விகள்

1. நாம் யாருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும். ஏன்?

2. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் என்ன செய்யக் கூடாது?

3. ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால், தேவன் என்ன செய்வார்?

4. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கிறது?

5. அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று பரிசோதிப்பது எது?

6. "அவர் நியாயத்திற்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை" என வாசிப்பதெங்கே?

7. 'பிதா, குமரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே' என்ன கொடுக்க இயேசு கட்டளையிட்டார்?

8. யார் நாமத்தினாலே, யாரிடம் கேட்க வேண்டும் என இயேசு சொன்னார்?

9. காலம் நிறைவேறினபோது, தேவன் அனுப்பியது யாரை?

10. தேவன், யோபுவை எப்படி பாதுகாப்பதாக சாத்தான் அறிவித்தான்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-12-2017

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழ் புதிர்கள்

1. மத்தேயு 7 : 5
2. தீத்து 1 : 16
3. மல் 2 : 11
4. 1கொரி 15 : 9
5. 2கொரி 3 : 7
6. ரோமர் 12 : 1
7. கலா 5 : 6
8. மல் 2 : 13
9. மத் 23 : 14
10. யூதா 6

சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
2. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
3. D. நேசமணி – நாமக்கல்
4. S. சூசைமணி – சென்னை
5. M. ஈஸ்வரி – கரூர்
6. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
7. Mrs. ரூபவதி நோபிள் – நெல்லை
8. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
11. J. ஜோசப் – கோவில்பட்டி
12. Dr. D.S. ஜெபநேசன் – நிலக்கோட்டை
13. S. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
14. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
15. Mrs. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
16. Mrs. ஏஞ்சலின் டேவிட் – திருப்பத்தூர்
17. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
18. Mrs. ஜெபசீலி ஜெயகொடி – திருச்சி
19. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
20. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
21. S. சுந்திரமணி – திருப்பத்தூர்
22. Mrs. M. திரவியம் ஆனந்தன் – ஆம்பூர்
23. N. லூயிஸ் ரூபி – ஆம்பூர்
24. Mrs. ஷோபியா தனராஜ் – திண்டுக்கல்
25. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
26. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
27. Mrs. மேரி ராஜ் – மதுரை
28. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
29. ராஜம்மாள் – திருப்பூர்
30. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
31. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
32. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
33. Mrs. ஹெலன் திலக் – மதுரை
34. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – பட்பை
35. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
36. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
37. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
38. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை.
39. சாந்தி வில்லியம் – பூலுக்கோட்டை
40. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
41. A. ரோஸ்மேரி – சென்னை
42. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
43. R. சரோஜா – தென்கலம்
44. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
45. M. புஷ்பராணி – நாமக்கல்
46. D. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
47. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

சென்ற மாதம் நடைபெற்ற ஊழியங்களில் சில...

சென்னை குமரன்நகர் கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற கூட்டங்களில் நமது ஆசிரியர் செய்தியளித்தபோது

திருமுழுக்கிலே வசனத்திற்கு கீழ்படிந்த சகோதரிகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான வேதாகம முகாமில் பங்குபெற்றோர்

இம்மாதம் பார்வையற்றோர்க்கு அரிசி வழங்கப்பட்டது

பொதுவான செய்திகள்

டெங்குக் காய்ச்சல்

- டெங்குக் காய்ச்சல் (Dengu Fever) என்ற டெங்கி காய்ச்சல் அல்லது எலும்பு முறிவுக் காய்ச்சல், மனிதர்களிடையே டெங்கு வைரஸ்சால் ஏற்படும் ஒரு அயனமண்டலத் தொற்றுநோய் ஆகும்.
- இது கொசுக்களால் பரவுகிறது. இந்நோய் வந்தால் கடும்காய்ச்சலுடன், கடுமையான மூட்டுவலி, தசைவலி, தோல் நமைச்சல் போன்ற உணர்குறிகள் ஏற்படும்.

- தொற்றுநோய் தீவிரமடைந்த நிலையில், உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் டெங்கு குருதிப்போக்குக் காய்ச்சல், (கடுமையான குருதிபோக்கை ஏற்படுத்தும்) டெங்கு அதிர்ச்சிக் கூட்டறிகுறி என்பன உண்டாகும்.
- இது உயிர் ஆபத்துகளை விளைவிக்கக் கூடிய ஒரு கொடிய நோயாகும்.
- இது உடலை மிகவும் வருத்தும் நோய்; ஆகையால் எலும்பை முறிக்கும் காய்ச்சல் (Breakbone Fever) எனவும் அழைக்கப்படும்.
- பாதிக்கப்பட்ட நோயாளி நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்பு சாறுகளை காலை, மாலை ஆகிய இரண்டு வேளை அருந்துவதன் மூலம், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, ரத்தத்தில் உள்ள தட்டை அணுக்களின் அளவு குறையாமல் பாதுகாக்கபடுவதாகச் சித்த மருத்துவம் கூறுகின்றது.
- கொசு (ஏடிஎஸ்) உருவாகமல் தடுப்பதற்கு, சுற்றுபுறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்றுமுழுதாக அழித்தல், வதிவிடத்தில் இனம்பெருகாது கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானது.
- சுற்றுப்புறத்தில் தேங்கு நீர்நிலைகளைக் கண்டறிந்து, அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற்கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன கொசுக்களின் பெருக்கத்தைத் தடுக்கின்றது.
- பூச்சிகொல்லி மருந்துகளால் மாந்தருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கருதுமிடத்து தேங்கிய நீர்நிலைகளை வெறுமைப் படுத்தும் முறையே சாலச்சிறந்தது.
- தோலை மூடக்கூடிய உரிய ஆடைகள் அணிவது, தூங்கும்போது கொசுவலை உபயோகிப்பது, கொசுகடிக்கு எதிரான களிம்பு, கொசுவர்த்திச் சுருள் போன்ற கொசுவிரட்டிகள் பயன்படுத்தல் என்பன கொசு கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ள உதவும்.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th November 2017

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

தபால் வழி பைபிள் பாடங்கள்

அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

கைபிரதிகள்

உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும்.

விபரங்களுக்கு

92 4421 4421, 92 4431 4431

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To